**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 79/2022**

| | | DEPOSITION OF WITNESS | PW.4 |
|---|---|---|---|
| NAME | சுப்ரமணி | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 13.03.2026.

**வாதி தரப்பில் முதல் விசாரணை :-**

நான் இந்த வழக்கில் 3ம் நபர். எனது தரப்பு சாட்சியாக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதில் உள்ள விவரங்கள் தெரியும். படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எனது தரப்பு பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை என்றால் சரிதான். தாவா விவரம் கோமதி சொல்லி தெரியும். கோமதி குடும்பத்தை எனக்கு 20 வருடங்களாக தெரியும். வாதிகள் உறவினர்கள் அல்ல ஊர்க்காரர்கள். நான் ராஜா கோயில் கிராமம் சேத்துவண்டையில் வசிக்கிறேன் என்றால் சரிதான். வாதிகள் எங்கு வசிக்கிறார்கள் என்றால் சின்ன மகள்கோமதி கோயம்புத்துரில் வசிக்கிறார், சித்ரா குடியாத்தம் ரயில் நிலையம் அருகே வசிக்கிறார்.

2. கோமதி மற்றும் சித்ராவின் அப்பா பெயர் சம்பத். அவர் கல்லேரி கிராமத்தில் வசித்து வந்தார். கல்லேரியிலிருந்து ராஜா கோயில் சுமார் 5 கி.மீ துாரம் இருக்கும் என்றால் சரிதான். அவர்கள் போயர் இணத்தைச் சார்ந்தவர்கள். சித்ரா மற்றும் கோமதி உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார்களா என்றால் சித்ரா மட்டும் உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார். சித்ராவிற்கு என்ன பிரச்சனை என்றால் சில நேரங்களில் மனநிலை சரியில்லாமல் இருப்பார். சம்பத் நல்ல உடல் நிலையோடு இருந்தாரா என்றால் இல்லை, சில நேரங்களில் அவரும் மனநிலை சரியில்லாமல் இருப்பார்.

3. அவர் எந்த மருத்துவமணையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என எனக்குத் தெரியாது. சம்பத் எப்போது காணாமல் போனார் என்றால் சுமார் 15 வருடத்திற்கு முன்பு காணாமல் போனார். சம்பத் காணாமல் போன பிறகு அவரது குடும்பத்தார் எங்கெங்கு தேடினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்ற விவரமும் எனக்கு தெரியாது. சம்பத்தின் மனைவி பெயர் ராணி. ராணி சம்பத் காணாமல் போனதற்கு பின்னால் இறந்து விட்டார்.

4. சம்பத்தின் அப்பா பெயர் கண்ணன், அம்மா பெயர் முனியம்மாள். கண்ணன் 1979ல் இறந்து விட்டார். முனியம்மாள் 2014ல் இறந்து விட்டார். எனக்கு இந்த வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாது என்றாலும் வாதி கேட்டுக் கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வசித்து வரும் ஊரும் வாதிகள் வசிக்கும் ஊரும் சம்பத் வசித்த ஊரும் வெவ்வேறு பகுதியைச் சேர்ந்தது என்றாலும் அதனால் வாதிகள் எனது ஊர்க்காரர்கள் சொல்வது தவறு என்றால் சரியல்ல. முதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தவறானவை என்றாலும் அதனால் எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/– K.கார்த்திக் அசாத்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.